DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 169 /2022**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | ஈஸ்வரன் | Father Name – பிச்சைமணி | |
| Age | 26 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.03.2026.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

1. தொந்தியம்மாள் 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தானபத்திரத்தில் பூர்வீக சொத்தை எழுதிக்கொடுக்கிறேன் என்றோ அல்லது மாயாண்டித்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை எழுதிக்கொடுக்கின்றேன் என்றோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி தான பத்திரம் மூலம் எத்தனை சொத்துக்களை தானமாக எழுதிக்கொடுத்தார் என்றால் வழக்குரை சொத்தான தோட்டத்தை மட்டும் தான் எழுதிக்கொடுத்தார். எனக்கு 6 வயதாக இருக்கும்போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட தான பத்திரத்தை பற்றி தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான், எனது தந்தை என்னிடம் சொல்லிய விபரங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். தாவா சொத்து பூர்வீக சொத்து இல்லை என்பதாலும் அதில் எங்களுக்கு பாத்தியமில்லை என்பதாலும் தான் 2006ம் வருடம் ஏற்படுத்தப்பட்ட தான பத்திரத்தை ரத்து செய்ய 16 வருடங்களாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, நாங்களும் 1ம்பிரதிவாதியும் தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருந்து வந்தோம். தாவா சொத்து எங்கள் கூட்டு அனுபவத்தில் இருந்தது என்பதை நிரூபணம் செய்ய எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2006ம் ஆண்டு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த பின்பு 2015ம் ஆண்டு வரை எனது பாட்டி தொந்தியம்மாள் உயிருடன் இருந்தபோது தாவா சொத்தில் எங்களுக்கு பாகம் தருமாறு நாங்கள்

கேட்டதாகவோ அல்லது தொந்தியம்மாள் எங்களுக்கு பாகம் தருவதாக சொல்லியதாகவோ எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் தற்போது குடியிருக்கும் வீடு யார் பெயரில் இருந்தது என்றால் எனது தாத்தா மாயாண்டி பெயரில் இருந்தது, தற்போது எனது தந்தை பிச்சைமணி பெயரில் உள்ளது. நாங்கள் குடியிருக்கும் வீடு ஆதியில் எனது தந்தையின் தாத்தாவான சிவனாண்டி தேவர் பெயரில் இருந்து மாயாண்டித்தேவர் பெயருக்கு வந்து, மாயாண்டித்தேவரிடம் இருந்து எனது தந்தை கிரையம் வாங்கியதாக சொல்கிறேன் என்றால் எனது தந்தை மாயாண்டித்தேவரிடம் இருந்து கிரையம் வாங்கினார், ஆனால் சொத்து சிவனாண்டித்தேவருக்கு பாத்தியப்பட்டதா என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி நாங்கள் குடியிருக்கும் வீடு பூர்வீக பாத்தியப்பட்ட வீடு என்பதால் அதில் அவருக்கும் பாகம் இருப்பதாக வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்யவில்லை, ஒரு வீட்டை எனது தந்தை கிரையமாக வாங்கியுள்ளார், மற்றொரு வீடு 1ம் பிரதிவாதிக்கு தானமாக கொடுக்கப்பட்டது, வீடுகளை பொறுத்து நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டோம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 தான பத்திரத்தில் காசிமாயனுக்கு தானமாக கொடுக்கப்பட்ட வீடு தொந்தியம்மாளால் ராசுத்தேவரிடம் இருந்து 18.01.1976ம் தேதி கிரையமாக வாங்கப்பட்டது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி குடியிருந்து வரும் வீட்டை பொறுத்து நான் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 27.09.2007ம் தேதி தொந்தியம்மாள் வழக்குரை சொத்தை பொறுத்து வா.சா.ஆ.2 சீர்திருத்தல் பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தான பத்திரத்தில் சர்வே எண்.1395/2Bக்கு கட்டுப்பட்ட 1 ஏக்கர் 15 செண்ட் நிலம் தானமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 சீர்திருத்தல் பத்திரத்தில் 1 ஏக்கர் 15 செண்ட் என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால் 91 செண்ட்டை தான் தானமாக கொடுக்கிறேன் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தான பத்திரத்திலும், வா.சா.ஆ.2 சீர்திருத்தல் பத்திரத்திலும் தொந்தியம்மாள் தனது பாகத்தையும் சேர்த்து தானமாக

கொடுக்கிறேன் என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தான பத்திரத்தில் 2ம் பக்கத்தில் தொந்தியம்மாள் தனக்கு உடம்பில் ரத்தக்கொதிப்பு, தோல்வியாதிகள் இருப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தான பத்திரத்தில் "வயதான எனக்கு வேண்டிய உணவு, உடை, வைத்திய வசதிகள் போன்ற அனைத்தையும் நீயே செய்து என்னை பராமரித்து வருகிறாய், இனிமேலும் என் ஆயுட் காலம் வரை என்னை பாதுகாத்து வருவாய் என்ற நம்பிக்கையைக் கொண்டும்" என்று தொந்தியம்மாள் கூறியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அது தவறாகும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் "காலம் சென்றதின் மேல் நீயும், நானும், என்னுடைய மகனான பிச்சைமணியும் சேர்ந்து வாய்கறலாக ஜாதி மத்தியஸ்தர்கள் முன்பாக பாகம் செய்து கொண்டபடி எனக்கு கிடைத்து என் பாத்தியத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிற" என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 15 செண்ட் என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 15 செண்ட் நிலத்தை நான் 6 வயதாக இருக்கும்போது 2006ம் ஆண்டு தொந்தியம்மாளுக்கு 67 செண்ட்டும், காசிமாயனுக்கு 24 செண்ட்டும், எனது தந்தை பிச்சைமணிக்கு 24 செண்ட் என பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட 24 செண்ட் நிலத்தையும் சேர்த்து 1 ஏக்கர் 15 செண்ட் நிலம் தவறுதலாக எழுதப்பட்டதால் வா.சா.ஆ.2 சீர்திருத்தல் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. தொந்தியம்மாள் தவறுதலாக எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட 24 செண்ட் நிலத்தையும் 1ம் பிரதிவாதி காசிமாயனுக்கு எழுதி கொடுத்தால் தான் வா.சா.ஆ.2 சீர்திருத்தல் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றும், எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட 24 செண்ட் நிலம் தற்போதும் எனது தந்தை வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல, தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 91 செண்ட் நிலம் தான். நாங்கள் பூர்வீக பாத்தியப்பட்ட வீட்டையும், 24 செண்ட் தோட்டத்தையும் பாகப்பிரிவினையின் அடிப்படையில் அனுபவித்து வருகிறோம் என்றும் தற்போது கூடுதல் நிலம் வேண்டும் என இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.6 விடுதலைபத்திரத்தில் உள்ள சொத்திற்கும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் எனது வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் தவறு என்றும், எங்கள் பாகத்திற்கு நாங்கள் குடியிருக்கின்ற வீடும், 24 செண்ட் நிலமும் கிடைத்துள்ளதால் நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தொந்தியம்மாள் ஏற்படுத்திக்கொடுத்த வா.சா.ஆ.1 ஆவணம் முறையான ஆவணம் என்றும், அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று நாங்கள் கோரியள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எங்களுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.03.05 12:32:22 +0530

District Munsif,
Bodinayakanur.